# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.12304/C/2023

திரு ஏ. சுந்தர் ராஜன் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலர் மற்றும்
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
கன்னியாகுமரி கோட்டம்,
நாகர்கோவில் மாவட்டம் - 629 001. -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 05.12.2022 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 26.12.2022 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 20.01.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 03.07.2023 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு ஏ. சுந்தர் ராஜன் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி இரா. கிருஷ்ணம்மாள், கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரினக்காப்பாளர் அலுவலகம், கன்னியாகுமரி கோட்டம், நாகர்கோவில் மாவட்டம் என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரினக்காப்பாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தமிழ்நாடு அரசு, அயனி மரம் முறிக்காமல் பாதுகாக்க வேண்டுமென்று பிறப்பித்த அரசாணையின் சான்றிட்ட நகல் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 7 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு பொ.த.அ.எண்.RTI/12791/2022 நாள் 26.12.2022 தேதியிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், மேற்படி, தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து முழுமையான தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக ஏற்கெனவே மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், அத்தகவல்கள் மனுதாரருக்கு போதுமானவை எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.12304/C/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலர் மற்றும்
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
கன்னியாகுமரி கோட்டம்,
நாகர்கோவில் மாவட்டம் - 629 001.

**<u>வழக்கு எண்.SA.12304/C/2023</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு ஏ. சுந்தர் ராஜன், த/பெ. ஏசுதாசன்,
III/9/26(1)/ அழகனாமூலை,
முழுக்கோடு கிராமம், அருமனை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 151.

Copy to: File
SNPS / 15.04.2026